**அமைவிடம்**

தென்னிந்தியாவின் கோடிக்கரை நாகபட்டிணம் போன்ற கரையோரப்பட்டிணங்களையும், இலங்கையின் வடபகுதியினையும் பிரிப்பது பாக்கு நீரினை ஆகும்.இவ் இலங்கைத்தீவின் வடமாகாணத்தின் கிழக்கே பருத்தித்துறையையும் மேற்கே கீரிமலையையும் இணைக்கும் காங்கேசன்துறை வீதியில் அமைந்திருப்பதே வல்வெட்டித்துறை நகரம் ஆகும்.தற்சமயம் இவ் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுமைக்கு உட்பட்டு 7 கிராமசேவகர் பிரிவுகள் செயற்படுகின்றன.இதில் ஆதிகோவிலடி கிராமம் வல்வை வடமேற்கு கிராமசேவகர் பிரிவான J/388இல் அமைந்துள்ளது.இதன் தற்போதைய எல்லைகளாக…

1. வடக்கு - பாக்கு நீரினை
2. கிழக்கு - வாடியடி ஒழுங்கை
3. தெற்கு - பருத்தித்துறை- காங்கேசன்துறை பிரதான வீதி

   மேற்கு - தற்சமயம் வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள இராணுவ முகாமின் கிழக்குபகுதி

ஆதிகோவிலடி குடியிருப்பு நிலம் போதாமையினால் தீருவில் முருகன் கோவிலுக்குச் சொந்தமான காணிகளில் பெரிய குடியேற்றம், சின்ன குடியேற்றம் என அறியப்பட்ட இடங்களிலும், சிவன் கோவிலுக்குச் சொந்தமான காணிகளிலும் எம் மக்கள் குடியிருப்புக்களை குத்தகை அடிப்படையில் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.இதுமட்டுமல்லாது 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக எமது மக்கள் அயல் கிராமங்களான ஊரிக்காடு,காட்டுப்புலம்,தொண்டைமானாறு,கெருடாவில்,பொலிகண்டி போன்ற இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.மேற்கூறிய மக்கள் அனைவரும் ஆதிகோவிலடி மக்களெனவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

**ஆதிவைரவர் கோவில்**

இக் கோவிலில் மூல தெய்வமாகிய ஆதிவைரவர் எம்மோர் மக்களின் குலதெய்வமாக போற்றி வழிபடப்படுவர். இவ்வாலயம் 1825ம் வருடம் வல்வை பொதுமக்களால் கட்டப்பட்டதாக யாழ் கச்சேரிப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன.எனினும் இவ்வாலயம் குறைந்தது 3 நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சிறிய கொட்டிலாக அமைந்திருந்து இப்பொழுது இருக்கின்ற புதுப்பொலிவுடனான கட்டிடங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்ததற்கான சரித்திரச் சான்றுகளும் கர்ணபரம்பரைக் கதைகளும் இல்லாமால் இல்லை.

**இராக்கச்சி அம்மன்(மனோன்மணி) கோவில்**

ஆதிகோவிலடி மக்கள் வாழும் கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்டு வாடிஒழுங்கையில் இராக்கச்சி அம்மன் எனும் சிறிய ஆலயமும் அமைந்துள்ளது. இக் கோவிலிலும் நித்திய பூசைகள் நடைபெறுகின்றன.இவ்வாலயம் ஏறக்குறைய 1 நூற்றாண்டு பழமை வாய்ந்ததாக கொள்ளப்படும்.

ஆதிகோவிலடி மக்கள் இவ் இரு கோவில்களையும் தவிர வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் மற்றும் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர கோவில் (சிவன் கோவில்) ஆகிய இரு கோவில்களுக்கும் தமது பாரிய பங்களிப்பை நல்கி வருகின்றனர்.

**தொழில்**

மக்களின் பாரம்பரிய தொழிலாக மீன்பிடி தொழிலையே கொள்ள வேண்டும்.எமது மூதாதையர் நவீனத்துவம் அறிமுகமாவதற்கு முன்னரே இயற்கை வளங்களைப் பயன்படுத்தி இத்தொழிலை வெற்றிகரமாக கைக்கொண்டு வந்துள்ளனர். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மீன்பிடி தொழில் நவீனமயப்படுத்தப்பட்டதுடன் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் வடமாகாணம் 25% பங்களிப்பை செய்த காலப்பகுதியில் ஆதிகோவிலடியின் மீன் உற்பத்தி விகிதம் மட்டுமே இலங்கையின் மொத்த உற்பத்தியில் 8 வீதமாக இருந்த பதிவேடுகளில் காணப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்ட போர்ச் சூழலால் ஆதிகோவிலடி மக்களில் சிலரும் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையால் இன்று கணிசமான எமது மக்கள் கனடா,இங்கிலாந்து,நோர்வே,டென்மார்க் போன்ற இடங்ளளில் வாழ்ந்து வருவதுடன் தமது உறவினர்களுக்கு பல வழிகளிலும் உதவிகளையும் செய்து வருகின்றனர்.

**ஆதிகோவிலடிக்கு ஏற்பட்ட அனர்த்தங்கள்**

எமது கிராமத்தை அண்டியதாக 1960களில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவமுகாம் செயற்பட்டு வருகின்றது.இதனாலும் கடலில் ரோந்து புரியும் கடற்படை வீரர்களாலும் (குறிப்பாக)1983களில் இருந்து தரை,கடல் மற்றும் ஆகாய தடைகளால் எமது கிராமமும் மக்களும் பெரும் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டு வந்தனர். இவ் அழிவுகளிலும் உச்சகட்டமாக 1987ம் ஆண்டு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் லிபரேஷன் (Operation Libaration) எனும் இராணுவ நடவெடிக்கையை குறிப்பிடலாம்.இதில் எமது கிராமும் மிகப்பாரிய அனர்த்தத்திற்கு உள்ளானது. இந்திய அமைதிப்படை காலத்திலும் எமது மக்கள் சொல்லணாத் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். மேலும் 1995ம் ஆண்டளவில் ஏற்ப்பட்ட பெரும் கலவரத்தினால் ஏறக்குறைய எமது மக்கள் அனைவருமே வன்னிக்கு இடம் பெயர்ந்தனர். பின்னர் போரின் உக்கிரம் தணிந்த காலத்தில் பலர் மீண்டும் இக் கிராமத்திற்கு வந்து குடியேறினர். இத்தனைக்கும் மேலாக 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி எனும் ஆழிப்பேரலை எமது கிராமத்தையும் முற்றாக அனர்த்தத்திற்கு உள்ளாக்கியது. மேற்கூறிய அனர்த்தங்களால் எம் மக்கள் சின்னாபின்னப்பட்டு தற்பொழுது மீண்டும் எம் மண்ணில் சாதாரண வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றர்.மேலும் சொல்லப்போனால் எமது மீன்பிடித் தொழிலுக்கு இலங்கை அரசாங்கமும் இந்திய மீனவர்களும் பல தடைகளையும் இடர்களையும் ஏற்படுத்திய வண்ணமே உள்ளன. இதனால் எம் மக்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவது உசிதமன்றோ எதிர்காலத்தில் முன்னேற்றம் ஏற்படுமன்றோ நம்பிக்கையற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் எமது இளைஞர்கள் யுவதிகள் மாற்றுத்தொழிலை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.சுருங்கக் கூறின் இம் மீன்பிடித்தொழிலை நம்பி வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலையிலேயே உள்ளனர். தீமையிலும் நன்மையுண்டு (………) என்பது போல எமது இளைஞர்கள் யுவதிகள் கல்வி வளர்ச்சியில் பெரும் நாட்டத்தை காட்டி வருகின்றனர்.

**கல்வி வளர்ச்சி**

கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில் எமது கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டு வந்தது. இதற்கு நியாயப்படுத்தக் கூடிய காரணங்கள் இருந்து வந்துள்ளது. இதனால் 1970களில் எமது ஊரைச் சேர்ந்த விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே அரசாங்க உத்தியோகத்தில் இணைந்துள்ளனர். ஏறக்குறைய 30 ஆண்டுகளின் பின்னரே எமது மக்களிடையே கல்வியின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்ப்பட்டதெனலாம். இதற்கு இரண்டு காரணங்களை கூறலாம்.

1. போரினால் ஏற்பட்ட தாக்கம் கல்வி வளர்ச்சியினால் தாம் மீண்டும் எழ வேண்டும் என்ற தாகம்.
2. எமது மக்கள் பிற ஊர் மக்களுடனும் பிற நாட்டு மக்களுடனும் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பினால் உண்டாகிய எழுச்சியானது பெற்றோர்களையும் வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்களையும் துாண்டியமை.

எமது கல்வி வளர்சியை 2005ம் ஆண்டளவிலிருந்து 2016ம் ஆண்டு வரை ஆய்விற்கு உட்படுத்திய வகையில் பின்வரும் தரவுகள் (அண்ணளவாக) கிடைக்கப்பெற்றுள்ளன.

| | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| ஆண்டு | தரம்-5 புலமை பரீட்சை(100ற்கு மேல் பெற்றவர்கள்) | சாதரணதர பரீட்சை (O/L | உயர்தர பரீட்சை(A/L) |
| 2005 | - | 03 | - |
| 2006 | - | 05 | 02 |
| 2007 | - | 15 | 01 |

| | | | |
|---|---|---|---|
| 2008 | 03 | 06 | 03 |
| 2009 | 02 | 01 | 04 |
| 2010 | 01 | - | 13 |
| 2011 | 04 | 01 | - |
| 2012 | 03 | 17 | - |
| 2013 | 07 | 03 | - |
| 2014 | 05 | 08 | - |
| 2015 | 05 | 14 | 10 |
| 2016 | 14 | 10 | 03 |